1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், ஒரத்தநாடு, கும்பகோணம், பாபநாசம், மன்னுர்குடி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டணம், நன்னிலம், மாயூரம், சீர்காழி, பட்டுக்கோட்டை இப்போது பேராவூரணி ஆகிய 12 இடங்களில் நடைபெற்று வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: இந்தக் கணக்குகளைக் கவனிப்பதற்கு இயந்திர முறைகள் இந்த மாநிலத்தில் கையாள்வது இல்லை என்று ஒரு சந்தர்ப்பத்திலே இந்தச் சபையிலே சொல்லப்பட்டது. இப்போது பல இடங்களிலே இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொன்னுர். இதன் மூலமாக, வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகும், வேலைவாய்ப்புக் குறையும் என்பதை அரசு அறியுமா? ஆகவே, அங்கே உள்ளவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பைக் கொடுத்தபிறகு இப்படிப்பட்ட முயற்சியை எடுத்துக் கொள்ளலாமல்லவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது 25 வட்டங் களில் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாரும் வேலைவாய்ப்பு இல்லை என்ற முறையில் பாதிக்கப்படவில்லை. அப்படி யாரும் பாதிக் கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேண்டிய மாற்று வேலையும் கொடுக் கப்பட்டிருக்கிறது.

மறையூர் சாலை

* 716. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலையைச் சீர் செய்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அரசின் பரிசீலனை யில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியத் தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலையைப் போட்டுக்கொண் டிருக்கிறுர்கள். அது சதுப்பு நிலமாக இருப்பதால் சாலை கப்பி போட்டு போட்டால்தான் நல்ல முறையிலே அமையும். அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தபோதுகூட அவர்

களிடத்திலே இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிற இந்தக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய முறையில் நல்ல சாலையாக, கப்பி சாலையாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது அந்த சாலைக்காக ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் அளவில் எஸ்டிமேட் போடப்பட்டு நாகை கோட்டப் பொறியாளர் டெண்டர் விட்டிருக்கிறார். அதற்காக 6,152 ரூபாய் அளவிலே பார்ட் பேமண்ட் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேலை ஆகஸ்டு மாதத்திற்குள் முடிந்துவிடும் என்ற தகவல் வந்திருக்கிறது.

வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

* 717. வினு—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத் தலைவர் மீதும், ஆணையாளர் மீதும் கையாடல் குற்றங்கள் அடங்கிய புகார் மனு ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புகார் மனுவின் மீது அறிக்கை அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநரும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் கோரப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இறுதி அறிக்கை அரசுக்கு அனுப்பப்படவில்லை. இறுதி அறிக்கை வரப்பெற்றதும் பரிசீலனைக்குப் பின் தகுந்த ஆணை பிறப்பிக்கப்படும்.

காரியப்பட்டி ஊராட்சி

* 718. வினு—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், காரியப்பட்டி ஊராட்சியில் ஒரு பகுதிக்கு (Ward) பெயர் மாற்றப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு அண்மையில் வந்துள்ளதா?